## 6. வானொலி - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு பெறல்

கோடானு கோடி மக்களின் கவனங் கவர்கின்ற வானொலியும், தொலைக்காட்சியும், மொழிப்பயன்பாட்டுக்கு ஏற்ற கருவிகளாகும். தமிழ் மொழியின் ஆற்றலையும் வீச்சையும் அறிந்து கொண்டவர்கள் இக்கருவிகளைப் பயன்படுத்தி முன்னேற அரிய வாய்ப்புள்ளது.

மொழியறிவின் பயனாய் வாய்க்கப் பெற்ற படைப்பாற்றலைக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். கையெழுத்து இதழ் நடத்தியும், கலலூரி விழாக்களில் நாடகம், இசை, பட்டிமன்றம் முதலியவற்றில் பங்கெடுத்துக் கொண்டும், இதழ்களில் கதை -கட்டுரை- கவிதை -நாடகம் -நகைச்சுவைத் துணுக்கு முதலியவை எழுதியும் பெற்ற பட்டறிவைக் கொண்டே வானொலியையும், தொலைக்காட்சியையும் நாட வேண்டும்.

### வெளிப்பாடு

முன்னேறத் துடிப்பவன் ஒருவன், தன் மனவுணர்வுகளைப் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்த முயல வேண்டும். ஒவ்வோர் ஊடகத்திலும் அலைந்த பின்பே அவனுக்கேற்ற துறை எது எனப் புலப்படும். சிறுகதையா? கவிதையா? நாடகமா? பாடலா? நடிப்பா? -இவற்றில் எத்துறையில் அவனுக்கு வெற்றி வருகின்றதோ, அத்துறையை மேற்கொள்ள வேண்டும். தனக்கேற்ற துறை ஒன்றில் தீவிரமாக அலைந்து, முயற்சிகள் பல புரிந்து வெற்றி -தோல்வி மிகப்பல கண்ட பின்பே அத்துறையின் நுட்பங்கள் கைவரப் பெறும்.



வெற்றி பெற முடியாது. தான் ஈடுபட விரும்பும் துறையின் கூறுபாடுகள் அனைத்தையும் அறிந்து கொள்ள முயல வேண்டும். ஆயின் அவற்றை அறிந்து கொள்ள முதற்படி, கல்லூரியில் பயிலுங்காலத்துப் பெறுகின்ற பட்டறிவாகும். இந்தப் பட்டறிவைக் கொண்டே வானொலி -தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியும். படிப் படியான வளர்ச்சியின் முதிர்ந்த நிலையே வானொலியிலும் தொலைக்காட்சியிலும் கிடைக்கும் வாய்ப்பாகும்.

### தனித்திறம்

வானொலி -இது தனிவகைத் துறை.

தொலைக்காட்சி -இது மற்றொரு தனிவகைத் துறை. இரண்டுமே படைப்பு முயற்சிக்கு உதவுபவை. ஆயின் இரண்டிற்கும் அணுகுமுறைகள் வெவ்வேறு ஆகும். கதை ஒன்றை எழுதி இதழ் ஒன்றுக்கு அனுப்புவது வேறு. ஆயின் அதே கதையை அல்லது நாடகத்தை வானொலிக்கோ, தொலைக்காட்சிக்கோ அனுப்பும் போது மேற்கொள்ள வேண்டிய நுட்பங்கள் முற்றிலும் வேறானவை.

வானொலி நிகழ்ச்சிகள் -செவிப்புலனால் அறியப்பட வேண்டியவை.

தொலைக்காட்சியோ செவிப்புலனுக்கும் கட்புலனுக்கும் உரியது.

இதழ் ஒன்றில் வெளியாகும் நாடகமோ, எழுத்தால் புலனாவது.

மேற்கண்டவாறு, இதழில் வெளியாகும் நாடகம் ஒன்றிற்கும், வானொலி நாடகத்திற்கும் அடிப்படை வேறுபாடுகள் - அணுகுமுறையில் வேறுபாடுகள் உள்ளன. எனவே எழுத்தாளராக முற்படுவோர், இம்மூன்றிற்கும் மேற்கொள்ள வேண்டிய உத்தி முறைகள் வெவ்வேறு என்பதை அறிய வேண்டும்.

### எடுத்துக்காட்டு

"சோ" என்று மழை பெய்கிறது. கடுங்காற்று வீசுகின்றது. குளிரடிக்கின்றது. இவ்வாறு காட்சி -நிகழ்ச்சி ஒன்று தொடங்குகின்றது. இதனை ஏட்டில் வடிப்போருக்குச் சிக்கல் குறைவு. எழுத்தில் வடிக்கச் செலவு ஏது?

"அதோ அந்த உருவம், சோ என்ற மழையில் தள்ளாடி வருகின்றது. மரங்கள் பேய்பிடித்தாடும் பெண்களைப் போன்று ஆடுகின்ற அளவுக்குக் காற்று சுழன்று சுழன்றடிக்கின்றது. குளிர் வேறு" -என்று நாடகத்தை- இதழ் ஒன்றுக்காக எழுதிடலாம்.

## வானொலியில்

மேற்கண்ட நிகழ்ச்சிகளை ஒலி உருவில் மட்டுமே வெளிப்படுத்த முடியும். மழை கொட்டும் ஒலி; புயலடிக்கும் ஓசை; குளிரடிப்பதைப் புலப்படுத்த"ஐயோ! என்னா மாதிரி குளிருது" என்ற வசனம்; இவை தேவை. பின்னணி ஒலி மூலமோ, பாத்திரங்களின் உரையாடல் மூலமோ வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு உத்திமுறை மாறுகின்றது.

## தொலைக் காட்சியில்

மேற்கண்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டவேண்டும்.. மழை பொழிவதையும், புயலடிப்பதையும், குளிர் வீச்சையும் ஒளிப்பதிவினாலும், ஒலிப்பதிவினாலும் காட்டிடுவர். சூழலைப் புலப்படுத்துவது மட்டுமே நும் படைப்புப் பணி.

## மற்றோர் எடுத்துக்காட்டு

மதிவாணன் அந்த அறையுள் நுழைந்தபோது, விமலா முகஞ் சுளித்தாள். வேண்டாதவன் -பணம் கடனாக வாங்கி இன்னும் திருப்பித் தராதவன் மீண்டும் வந்தது ஏன் என்று வெறுப்புடன் அவனைப் பார்த்தாள்.

இக்காட்சியை வானொலியிலும், தொலைக் காட்சியிலும் புலப்படுத்த உத்திமுறைகள் வேறு.

## வானொலியில்

("டக் டக்" என்று கதவு தட்டும் ஒலி)

வீமலா: யார்?

குரல் : நான்தான் மதிவாணன். உள்ளே வரலாமா?

வீமலா: (வெறுப்பான மெல்லிய குரலில்) இவன் ஏன் வரான்? முன்னே வாங்கின பணத்தை இன்னும் திருப்பித் தரவில்லையே। மறுபடியும் வந்திருக்கான்.



## தொலைக்காட்சியில்

("டக் டக்" என்று கதவு தட்டும் ஒலி)

வீமலா: யாரவர்?

குரல் : நான்தான் மதிவாணன். உள்ளே வரலாமா...

வீமலா: (நடந்து வந்தபடி... கதவுக்கு அருகே சென்று கொண்டிருக்கையில் - தனக்குள்) இவன் ஏன் வந்திருக்கான்?கடங்காரன் மறுபடியும் கடன் கேட்க வந்திருக்கானோ...சனியன்...

## வேறுபாடு

பேச்சு மூலமும் உணர்ச்சிகளை ஒலி மூலமும் வானொலியில் தெரிவிக்க முடியும். ஆயின் தொலைக்காட்சியிலோ, படப்பிடிப்பு மூலம் காட்டலாம். வானொலியில் உரையாடல் மிகுதி. தொலைக்காட்சியில், உரையாடல் வள வள என இல்லாமல் குறைவாக இருக்க வேண்டும்.

திரைப்பட உரையாடல்களை அலசிப் பாருங்கள். கே.எஸ். கோபாலகிருஷ்ணன், கே. பாலச்சந்தர் என்ற இரண்டு பேரும் உரையாடல் வரைவதில் புகழ் பெற்றவர்கள். ஆனாலும், இருவருக்கும் இடையே பெருத்த வேறுபாடு உண்டு.

நாடக மேடைப் பாணியிலேயே உரையாடல் எழுதுபவர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன். அவருடைய கதையில் அனைத்துப் பாத்திரங்களும் முழு நீள உரையாடல் நிகழ்த்தும்.

கே. பாலச்சந்தர் வரையும் உரையாடல் சுருக்கமாகவும் செறிவாகவும் இருக்கும். காட்சிகள் மூலம் நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டிவிடுவார். கே. எஸ். கோ-வின் நடை, வானொலிக்கு ஏற்றது. கே. பாலச்சந்தரின் பாணி, தொலைக்காட்சிக்கு உகந்தது.

உத்தி முறைகளில் வேறுபாடு காட்ட வேண்டிய துறைகள் - வானொலியும், தொலைக்காட்சியும்.

வானொலி நிகழ்ச்சியில், படைப்பாளியின் பங்கு மிகுதி. அவர் வரையும் உரையாடலுக்கே முதன்மை. ஆனால் தொலைக்

படைப்பாளியின் பங்கினைப் போன்று படப்பிடிப்பும், அரங்க நிர்வாகமும் சிறப்பிடம் பெறுகின்றன.

## மொழிப்பயன்பாடு

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் இளைஞர்களுக்கு உரிய வாய்ப்புகள் யாவை? கற்பனை வளம் மிக்கவர்களுக்கு ஆதரவு உண்டா?

உண்டு. உண்டு.

வானொலியும், தொலைக்காட்சியும் புதுமுகங்களை என்றைக்குமே வரவேற்கின்றன.

புதிய புதிய நோக்கில், புத்தம் புது கற்பனைகளுடன் எழுதுகோலைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு வாய்ப்புகள் பல உள்ளன.

நாடகம் - ஓரங்க நாடகம்
ஒருமணி நேர நாடகம்
சிறுகதை - சிறுகதையைப் படித்துக் காட்டல்
கவிதை படித்தல்
நேர்காணல்
உரைச்சித்திரம்
சிறப்புச் செய்திகள் - என்று பல முனைகளில் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. இவை பல்வேறு தலைப்புகளில் ஒலி/ஒளி பரப்பாகின்றன.

வானொலி நிலையங்களும், தொலைக்காட்சி நிலையங்களும், சிறந்த படைப்பாளிகளையும் கலைஞர்களையும் தம்மிடம் வேலைக்கு வைத்துள்ளன.

இவர்கள் தரும் நிகழ்ச்சிகளுடன், வெளியாராகிய படைப்பாளிகளின் படைப்புகளும் நன்கு வரவேற்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வானொலியில் பின்கண்ட சில நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

| | |
|---|---|
| *இளைய பாரதம்* | *தமிழ் மணம்* |
| *மாதர் நிகழ்ச்சி* | *எல்லோருக்கும் கல்வி* |
| *மனை மங்கலம்* | *வீடும் வயலும் அறிவியல் கல்வி* |



| | |
|---|---|
| *அறிவியல் பூங்கா* | *விளையாட்டுக் களஞ்சியம்* |
| *மேழிச் செல்வம்* | *துலாக் கோல்* |
| *வேளாண் அரங்கம்* | *கிராம சமுதாயம்* |
| *உழவர் உலகம்* | *சேர்ந்திசை* |
| *பூவையர் பூங்கா* | *சாளரம்* |
| *சிறுவர் பூங்கா* | *கிராமியக் கலை* |
| *நாட்டுப்புற நிகழ்ச்சி* | *இலக்கியச் சிந்தனை* |
| *ஏற்றம் தரும் கல்வி* | *ஊர்ப் புறத்திலே* |
| *நகர் வலம்* | *ஏரும் ஊரும் —* |

---என்று மிகப் பலவான பல்சுவை நிகழ்ச்சிகளை வானொலியில் கேட்கலாம். இவற்றுள் தத்தமக்கு பிடித்தமான, இயல்பான நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து அதனில் நாட்டம் பெருக்கிச் சிறந்த படைப்பினை வானொலிக்கு அனுப்பலாம்.

எடுத்துக்காட்டாக "இளைய பாரதம்" என்ற நிகழ்ச்சியில், திறமை சான்ற இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகளை வானொலி தாராளமாக அளிக்கின்றது. நடிக்கத் தெரிந்தவர்கள், பாடத் தெரிந்தவர்கள், இசைக் கருவியில் நாட்டமுடையவர்கள், அழகிய முறையில் கவிதை படிக்கத் தெரிந்தவர்கள், இனிய முறையில் சிறுகதை படித்துக் காட்டப் பயிற்சியுள்ளவர்கள் -என்று திறமையுடைய இளைஞர்களுக்கு நல்ல வரவேற்பினை நல்குகின்றது, வானொலி. இளைய சமுதாயத்தினரிடம் படிந்துள்ள திறமையை ஒளிவீசச் செய்ய முற்படுவது, "இளைய பாரதம்" என்ற நிகழ்ச்சி. புதுப்புது நிகழ்ச்சிகளும் அறிமுகமாகின்றன.

"நாட்டுப்புற நிகழ்ச்சி", நாட்டுப்புறப் பாடல்களை அறிந்தவர்களுக்கு உகந்தது. நாட்டுப்புறப் பாடல்கள் பலவகை. அவற்றில் பயிற்சியும், தேர்ச்சியும் கொண்டவர்கள் ஓரளவுக்குப் பாடத் தெரிந்திருந்தால், வானொலி வரவேற்பளிக்கும்.

இனிய -எடுப்பான குரலில் தம் சொந்தக் கவிதைகளைப் பாடிக்காட்டவும் வாய்ப்புண்டு.

ஓரங்க நாடகம், ஒருமணி நேர நாடகம் - இவை வானொலியில் அவ்வப்போது இடம் பெறுகின்றன.

தாமெழுதிய சிறுகதைகளைத் தாமே படித்துக் காட்ட வாய்ப்புண்டு.

"உழவர் உலகம்", "சிறுவர் பூங்கா", "மனைமங்கலம்", "வயலும் வாழ்வும்", "நகர் வலம்" என்ற தலைப்புகளில் நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புள்ளது.

## எங்ஙனம் அணுகுவது?

வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபெற யாரை அணுகுவது? யாருடைய பரிந்துரை தேவை?

நும்மிடம் உள்ள கலைத்திறனே, படைப்பாற்றலே நும்மைப் பரிந்துரைக்கும். யாருடைய தயவும் தேவையில்லை. நும் படைப்பினை வெள்ளைத் தாளில், அழகுற எழுதி வானொலி நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். நடிப்பு- இசை- நாட்டுப்புறக் கலை- கவிதை படித்தல் முதலிய நிகழ்ச்சிகளில் பங்கு பெற விரும்புவர், தம்மைப் பற்றிய விவரங்களை வானொலி நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். நிலைய இயக்குநர், தக்க காலத்தில் செயல் மேற்கொள்வார். எந்தெந்தத் துறையில் வெளியாருடைய பங்கு தேவை என முடிவு செய்யப் பல நாட்கள் தேவை!

## பொறுமை தேவை

வானொலி நிலையத்திற்குக் கதை, கட்டுரை, நாடகம் அனுப்பிய மறுவாரமே இசைவான பதில் வரும் என்று எண்ணலாகாது. நீவிர் அனுப்பிய படைப்பு ஒன்று ஏற்கப்படுவதற்குத் தடைகள் பற்பல இருக்கலாம். படைப்பில் புதுமை இல்லாமல் இருக்கலாம். ஒலி பரப்புவதற்கு ஒத்த நடை இல்லாமல் இருக்கலாம். வானொலிக்கு உள்ள ஒலிபரப்பு வரம்பிற்கு மாறாக இருக்கலாம். படைப்பில் நிறைகளும் குறைகளும் இருக்கலாம். படைப்பு ஒன்று ஏற்கப்படுவதற்கு முன்பு, வானொலி நிலையத்தினர் மிகக் கூர்மையாக அலச வேண்டியுள்ளது.

## வரம்பு

ஒலிபரப்புவதற்குரிய செய்திகளுக்கு வரம்புகள் பல உள்ளன என்பதை நீவிர் உணர வேண்டும். மத உணர்வுகளை இம்மியளவும் புண்படுத்தலாகாது. சாதிகளைத் தாக்குகிற முறையில் -கேலி செய்கிற

முறையில் படைப்பு அமையலாகாது. அரசியல் கருத்துகளை



படைப்புகளில் நுழைக்கலாகாது. சமுதாயத்தில் குறிப்பிட்ட பகுதியினரை -குறிப்பிட்ட தொழில் செய்பவர்களைக் கிண்டல் செய்வதாக அமையலாகாது. அதே போன்று, குறிப்பிட்ட பகுதியினரை மிக உயர்த்தியும் வரையலாகாது. மனித நேயத்தை வளர்ப்பதாகவே படைப்புகள் அமைய வேண்டும்.

குறிப்பிட்ட வணிகப் பொருள்கள் பற்றிய வாசகங்கள் இருக்கலாகாது. எடுத்துக்காட்டாக நாடகம் ஒன்றில் :

ஆண் குரல் : *களைப்பா இருக்கு உமா. குடிக்க ஏதாவது கொண்டு வா..*

பெண் குரல் : *சரிங்க...இந்தாங்க...ஆர்லிக்ஸ்! நீங்க கேட்பீங்கன்னு தெரியும். தயாரா வைச்சிருக்கேன்!*

............

மேற்கண்ட உரையாடலில் ஆர்லிக்ஸ் என்ற வணிகப் பொருள் குறிப்பிடப்படுகின்றது. இவ்வுரையாடல், அப்பொருளுக்கு உரிய விளம்பரமாகி விடும். இதை வானொலி ஏற்காது.

"கமலாம்பாள் சரித்திரம்" என்ற புதினம், தமிழ்ப் புதின வரலாற்றில் இரண்டாவதாகத் தோன்றியது. இந்நூலில் "ஆடுசா பட்டி அம்மையப் பிள்ளை" என்ற ஆசிரியர் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகின்றார். அந்த நூலில. இடம் பெற்றது போன்று, வானொலி நாடகத்தில் ஆசிரியரையோ வேறு தொழில் புரிபவர்களையோ கிண்டல் செய்ய அனுமதி இல்லை. கேட்பவர் முகஞ்சுளிக்குமாறு உள்ள எதையும் தவிர்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, செவிப்புலன் குறைந்தவர்களை மையமாகக் கொண்டு தனியார் தொலைக்காட்சிகளிலும் திரைப்படங்களிலும் நகைச்சுவைக் காட்சிகள் என்ற பெயரில் மட்டமான காட்சிகள் வருகின்றன் இது சுவைக் கேடு. ஆனால் வானொலி நிகழ்ச்சிகளில் இத்தகு காட்சிகள் ஏற்கப்படா.

"ரகீம் எனக்குத் துரோகம் செய்துட்டான்" என்ற் உரையாடல் ஏற்கப்படும். "ரகீம்... அவன் இஸ்லாமியன் அல்லவா! எனக்குத் துரோகம் செய்யாம இருப்பானா" என்ற உரையாடல் ஏற்கப் படாது.. ஒருவன் தவறு செய்யலாம். அவன் முஸ்லீமாக இருப்பதால் தவறு

செய்தான் என்றோ கிறிஸ்தவனாக இருப்பதால் அவ்வாறு செய்தான் என்றோ குறிப்பிட்டு எழுதினால் அப்படைப்பு ஏற்கப்படாது.

ஏகாட்டி : அடி போடி, என் சக்காளத்தி! உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?

இவ்வுரையாடலில் "சக்காளத்தி" என்ற சொல்லை வானொலி நிலையத்தினர் ஏற்க மறுத்து விட்டனர். "இழிவழக்கு" என்று ஒதுக்கி விட்டனர். பண்பட்ட சொற்களையே பயன்படுத்த வேண்டும்; யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தலாகாது; மனித நேயமே தலைமை -முதலியவை வானொலி வரையறைகள்.

வானொலி நிகழ்ச்சிகள் அனைத்தையும் உளம் பதித்துக் கேட்டுப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். என்ன எழுத வேண்டும்; எப்படி எழுத வேண்டும்; எந்த அளவில் எழுத வேண்டும் என்ற வரையறைகளை நீங்களே வகுத்துக் கொள்ள முடியும். அவ்வாறு வகுத்துக் கொண்ட எல்லைக்குள், நும்முடைய கற்பனைப் பெருக்கினைப் பாய்ச்சி வளம் பெற முடியும்.

தி. ஜானகிராமன், அகிலன், சுகி சுப்பிரமணியன், அ. நடராசன், சோவிந்த இராமானுசம், ஞானப்பிரகாசம் முதலியவர்கள் வானொலியில் பங்கு கொண்டு புகழ் பெற்றவர்களாவர். பட்டுக் கோட்டை குமாரவேல் வானொலி நாடகங்கள் வரைவதில் வல்லவர். சுகி. சுப்பிரமணியன் நாடகங்களும் உரைச்சித்திரங்களும் புனைவதில் சிறப்பிடம் பெற்றவர் எண்ணற்ற எழுத்தாளர்களை வளர்ப்பதில் வானொலிக்குக் கணிசமான பங்குண்டு.

மொழித் திறனும், கற்பனைவளமும், பொறுமையும் கொண்டு, படைப்புகளை உருவாக்கினால் வானொலி கணிசமான தொகையினை அன்பளிப்பாகத் தந்து உங்களுக்கு வாழ்வும் வளமும் அள்ளித் தரும் என்பதில் ஐயமில்லை, மொழிப்பயன்பாடு சிறக்குமிடங்களில் ஒன்றாக வானொலி விளங்குகின்றது.

## தொலைக்காட்சியில்...

தொலைக் காட்சியில் படைப்பாளிகளுக்குரிய பங்களிப்பு, வானொலி போல் தலைமையானதன்று. காரணம், படப்பிடிப்பும்-- அரங்க அமைப்பும்-- படத் தொகுப்பும்-- பின்னணி இசையும்-- நடிப்பும் என்ற கூறுபாடுகள் தொலைக் காட்சியில் சிறப்பிடம் பெறுகின்றன. கதையும், உரையாடலும் வானொலியில் சிறப்பிடம்



பெறுகிற அளவுக்குத் தொலைக்காட்சியில் பெறுவதில்லை. சம அளவுக்கு மட்டுமே சிறப்பு உண்டு எனலாம். இந்தக் குறைபாட்டைப் படைப்பாளி உணர்ந்து கொண்டு தன் படைப்பைத் தொலைக் காட்சிக்கான
உத்தி முறைகளோடு வகுத்துக் கொள்ள வேண்டும்.

## வாய்ப்புகள்

தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் பல, படைப்பாளிகளுக்கு ஏற்றவை.

| | |
|---|---|
| இளந்தென்றல் | கண்மணிப் பூங்கா |
| வளரும் கலைஞர் | மனைமாட்சி |
| இசையரங்கம் | நூலாய்வு |
| நல் வாழ்வு | முத்தமிழ் மன்றம் |
| வயலும் வாழ்வும் | விளையாட்டு விமர்சனம் |
| குறு நாடகம் | ஒருமணி நேர நாடகம்--முதலிய |

நிகழ்ச்சிகளில் தொழில் முறைக் கலைஞர்கள் அல்லாத படைப்பாளிகளுக்கு ஏற்ற வாய்ப்புகள் உள்ளன.

"இளந்தென்றல்" என்ற நிகழ்ச்சி, திறமை சான்ற-- அறிமுகம் இல்லாத இளைஞர்களுக்கானதாகும். பாடிக் காட்டல், ஆடிக்காட்டல், பலகுரல் பேச்சு, கவிதை படித்துக் காட்டல், இசைக்கருவிகளைக் கொண்ட இசை நிகழ்ச்சி என்று கலைத்திறன் கொண்ட இளைஞர்களுக்கான நிகழ்ச்சியாகும். திறமை கொண்ட இளைஞர்கள் தம்மைப் பற்றிய விவரங்களைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநருக்குத் தெரிவிக்க வேண்டும். ஏற்ற சமயத்தில் அழைப்பு வரும். நேரில் சென்று திறமையைப் புலப்படுத்தினால் வாய்ப்பு அமையும்.

"நல்வாழ்வு" என்ற நிகழ்ச்சியும் பல்சுவை நிகழ்ச்சியாகும். நாடகம் அல்லது நேர்காணல், உரையாடல் என்ற வடிவங்களில் நல்வாழ்வு பற்றிய செய்திகளை எளியோர்க்கும் புரியும் படியாக விளக்க வேண்டும்.

"வயலும் வாழ்வும்" என்பது வேளாண் மக்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சியாகும். புதுவகை விதைகள், பூச்சிக் கொல்லி

மருந்துகள், உரம் இடுதல், பருவந்தோறும் பயிரிட வேண்டியவை பன பற்றிய பல்சுவை நிகழ்ச்சிகளின் கோவையே இது.

"மனைமாட்சி" - பெண்களுக்கான நிகழ்ச்சியாகக் கருதப்படினும், ஆடவரும் பங்கு பெறக் கூடியதே. மனைமாட்சியைப் பெண்கள்தாம் வெளிப்படுத்த வேண்டுமா? மனைமாட்சியினால் மிகுதியாகப் பயன் பெறுபவர்கள், ஆடவர்களே! இருபாலருமே நிகழ்ச்சிகளை அமைத்திடலாம். தடையில்லை. "உணவில் கலப்பு", "கூடைப் பின்னல்", "நலங்குப் பாடல்", "குழந்தைகளின் காப்பகம்" என்பன பற்றி நேர்காணலாம்; உரையாடலாம்.

"கண்மணிப் பூங்கா" - குழந்தைகளுக்கான அருமையான நிகழ்ச்சி. படைப்பாளிகளுக்கு அரிய வாய்ப்பினை நல்குவது. சிறுவர் - சிறுமியர் சேர்ந்திசை பாடுவர். கதை கூறுவர். குறுநாடகம் படித்துக் காட்டுவர். இவற்றிற்கான பாடல்-கதை-நாடகம் முதலியவற்றைப் படைப்பாளிகள் அனுப்பலாம்.

## சிக்கல்கள்

இதழியல், வானொலி போன்று தொலைக் காட்சி, படைப்பாளிக்கு வாய்ப்புகளை எளிதாக - உடனுக்குடனே வாரி வழங்கிட இயலாது. படைப்பாளிகள் கணக்கற்ற அளவில் தம் படைப்புகளைத் தொலைக் காட்சிக்கு அனுப்புகின்றனர். அவற்றை அலசி ஆராயவே பல திங்கள்கள் ஆகலாம். நூற்றில் ஒரு படைப்பே தேர்வு பெறும். எனவே விடாமுயற்சியுடன் படைப்புகளைத் தரமாக உருவாக்கிட வேண்டும்.

படைப்பாளி, புற உலகில் புகழ்பெற தொலைக்காட்சியை அணுகுவது நல்லது. இதழ்களிலும், வானொலியிலும் படைப்புகளை வெளியிட்டுப் பெற்ற புகழைக் கொண்டே தொலைக் காட்சியை நெருங்க வேண்டும். இதழியல், வானொலி ஆகியவற்றில் பல்வேறு வகைப் பட்டறிவு பெற்ற பின்பு, நும் படைப்பில் அழகும், செறிவும், நளினமும், கருத்தும், கலைவண்ணமும் விளங்க முற்பட்டிருக்கும். அத்தகு நிலையில் தொலைக்காட்சியினர் நும்மை நாடி வருவது உறுதி.